[Sri M. A. Manickavelu] [25th March 1960

Revenue Department Officers is in progress. It is seen from the preliminary reports received that in Sankarankoil taluk some of the rainfed tanks received only scanty supply of water, that crops in some portions of the ayacuts were kept up by wells and that there was failure of crops in a good number of ayacuts. About 75 villages are affected and about 10,359 acres of wet lands are likely to be granted seasonal remissions under B.S.O. 13 for crops either withered or which fetched an outturn of 2 annas and below due to inadequate water-supply in the tanks. The dry crops, however, were generally successful and the major dry crops of the taluk fetched or are expected to fetch a fair outturn. The rains which the taluk had recently for about 3 weeks are likely to improve the condition of the standing dry crops and it is hoped that there will not be any necessity for any special remissions apart from the seasonal remissions. Relief measures will be undertaken, if considered necessary.

In Tenkasi taluk also seasonal remissions will be given for wet crops either withered or which fetched a low outturn due to inadequate supply in the irrigation sources and there may not be necessity for the grant of special remission for dry lands.

It may, therefore, be seen from the above facts that the Government are watchful of the situation. The Collector of Tirunelveli is touring the affected areas. The question of affording further relief will be considered after his final report is received.

V.—PRESENTATION OF REPORTS.

(1) COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI T. SAMPATH: I, the Chairman of the Committee on Subordinate Legislation, present the Eighth Report of the Committee.

(2) COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI K. SATTANATHA KARAYALAR: I, the Chairman of the Committee on Government Assurances, present the Seventh Report of the Committee.

கனம் சபாநாயகர் அவர்களே, உறுதிமொழிக் கமிட்டியின் 7-வது அறிக்கையை இந்தச் சபை முன்பு சமர்ப்பிக்கும்போது சில சில விஷயங்களை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்தச் சபையிலே அங்கத்தினர்கள் கோரிப் பெறுவது மந்திரிகளிடம் இருந்து பெற முடியாத வாக்குறுதிகள். அது விலைமதிக்க முடியாத ஒன்று. ஆனால் இந்த வாக்குறுதிகள் எந்த முறையில் நிறை வேற்றப்படுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். 1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ந்தேதி ஸ்ரீ கட்டிமுத்து அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி இதுகாறும் நிறைவேற்றப்படவில்லை. ஒரு டாம் கட்டுவது, ஒரு சானல் கட்டுவது பற்றிய விஷயம் அது. இன்னும் சீப் இன்ஜினியரிடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்லப் படுகிறது.

1956-ம் வருஷம் ஸ்ரீ கே. ஆர். விஸ்வநாதனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. பரிசீலனை செய் யப்பட்டிருப்பதாகத் தெரிகிறதே தவிர எப்போது வேலை செய்ய எஸ்டி

25th March 1960] [Sri K. Sattanatha Karayalar]

மேட்டை ஒப்புக்கொள்ளப் போகிறுர்கள், எப்போது வேலை துவங்கப்படும் என்பது ஒன்றும் தெரியவில்லை, இதுவரையிலும். அதற்கப்பால் ரெவின்யூ டிபார்ட்மென்டைப்பார்த்தால் 2-ந் தேதி ஆகஸ்டு 1956-ம் வருஷம் ஹரிஜனங்களுக்கு 11 அசெயின்மென்டு கொடுக்கப்படுவது பற்றி கொடுக்கப் பட்ட வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இலாக்காக்களில் அந்த பைல்கள் அப்படியே உறங்கிவிடுகிறதோ என்று தோன்றுகிறது. ஒரு சில பிரச்னைகளில் கால தாமதம் ஆவதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. அதுவும் இண்டர் ஸ்டேட் விஷயமாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனுல் நமது மாகாணத்தில் நேரிடையாக நமது இலாக்காக்கள் செய்யவேண்டிய வேலைகளைக்கூட, சபையில் மந்திரி அவர்களால் வாக்குறுதி கொடுத்து விட்ட பிற்பாடு கூட அதைச் செய்வதில்லை, அதை மதித்து உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்வது இல்லை என்ருல் அதை வன்மையாகக் கண்டித்து, இம்மாதிரி வாக்குறுதிகளை மதிக்கவேண்டும் என்று வலி யுறுத்த விரும்புகிறேன். எதை அமுலாக்க முடியும், எதை அமுலாக்க முடியாது, அமுலாக்குவதில் உள்ள சிக்கல்கள் என்ன என்பதை யாவது தெள்ளத்தெளிய—அடுத்த நிதி ஆண்டுக்குள்ளாவது தெரி விக்க வேண்டியது அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட வாக்குறுதியைப்பற்றி கமிட்டியார் எழுதும்போது, அதற்கு "இந்த வாக்குறுதியை நிறைவேற்றி யதாக நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள்" என்று இலாக்காக்களில் எழுது கிருர்கள். இதுபற்றி முடிவு எடுக்கவேண்டியது கமிட்டி. இலாக்காக்கள் அல்ல. இலாக்காக்களில் இருந்துவரும் பதில்கள் "இந்த அளவு நாங்கள் செய்து திருப்தியாகிவிட்டது, ஆகையால் நீங்கள் திருப்திப்பட்டுக் கொள்ளுங் கள்" என்ற முறையில் இருப்பதைக் கைவிடவேண்டுமென்று வேண்டு கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் சஜஷ்ஷுனுக கொடுத் திருப்பார்கள்.

SRI K. SATTANATHA KARAYALAR : இது ஒரு சஜஷனுக சொல்வ தானுல் சரி. அல்லாத முறையில் "This may be treated as implemented". என்ற வழக்கத்தைக் கைவிடவேண்டுமென்று வேண்டுகிறேன்.

கடைசியாக இந்தக் கமிட்டியிலே என்னைத் தலைவராக நியமித்து கழிந்த ஆண்டு சேவை செய்ய சந்தர்ப்பம் கொடுத்ததற்கும், மறுபடியும் இந்த ஆண்டும் இந்தக் கமிட்டியின் தலைவராக இருக்கும்படி நியமித்த தற்கும் கனம் சபாநாயகருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61—*cont.*

DEMAND XXIV—HARIJAN UPLIFT—*cont.*

MR. SPEAKER : இப்பொழுது ஹரிஜன மான்யத்தின்மீது விவா தம் நடக்கப்போகிறது. கனம் மந்திரி அவர்கள் பதில் அளிப்பதற்கு ஒரு மணி நேரம் போதும் என்று நினைக்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: இன்னும் பல கனம் அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்பதால் எனக்கு $\frac{3}{4}$ மணி நேரம் போதும்.

MR. SPEAKER : கடைசியாகப் பேசப்போகிறவர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள். வாஸ்தவத்திலே அவர்களுக்கு 15 நிமிஷம் ஒதுக்க வேண்டும். கடைசியாக ஒரு மணி நேரம் கனம் அமைச்சருக்கும் தலைவருக்கும் ஒதுக்கியிருக்கிறோம். என்னிடத்தில் இப்போது காங்கிரஸ் அங்கத்தினர்கள் 18 பேர்களும் திராவிட முன்னேற்ற கழக அங்கத்தினர்கள் 4 பேர்களும் பெயர் கொடுத்திருக்கிருர்கள். இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் கட்சியில் இன்னும் பெயர் கொடுக்கவில்லை. மூன்று, நான்கு பேர்கள் இருப்பார் கள் என்று நினைக்கிறேன். சுயேச்சை அங்கத்தினர்கள் இரண்டு மூன்று பேர் பேச இருக்கிருர்கள். இருக்கும் மூன்று மணி நேரத்தில் 25 அங்கத்தினர்கள் எப்படி பேச முடியும் என்று தான் எனக்கும் கவலையாக இருக்கிறது. ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் 5 நிமிஷம் பேசவேண்டு மென்று முடிவு செய்திருக்கிறேன். அப்போதுதான் எல்லோரும் பேச